**போக்குவரத்துச் செயற்திட்ட தயாரிப்பு வசதியின் - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------

போக்குவரத்துச் செயற்திட்ட தயாரிப்பு வசதியின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதிய 3425 SRI (SF) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றித்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதைய நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சான துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்படுத்தல் முகவராகவும் காணப்படுகின்றன. சாத்தியவள ஆய்வு, விபரமான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு ஆவணங்களைத் தயாரித்து செயற்திட்டத்தின் களப்பரிசோதனைக் கட்டத்தில் அமுலாக்கல் ஆதரவினை வழங்குவதன் மூலம் வீதி, புகையிரத மற்றும் துறைமுக துனைத்துறைகளிலுள்ள முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் ஆரம்பித்தல் வினைத்திறனை முன்னேற்றுதலே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,697.48 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 11.34 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,496.90 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 10 மில்லியன் தொகையினை நிதியீட்டம் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 200.58 மில்லியனை நிதியீட்டம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 சனவரி 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆந்நியச் செலாவணி ஆதாயம், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள முடிவுறா வேலையின் பெறுமதிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | 8.93 | முடிவுறா வேலை யின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | உரியவாறு கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கடன் பெறுவனவுகளிற்கு தேவையான சீராக்கம் செய்யப்படு:தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாகக் கையே ட்டின் பிரகாரம், மொத்தக் கடன் வட்டியில் 40 சதவீதம் மாத்திரமே இச்செயற்திட்டத் திற்குச் சாட்டப்பட வேண்டிய போதிலும், கொழும்பை அண்மித்த செயற்திட்டத்தின் கீழான போக்குவரத்துச் செயற்திட்ட தயார்படுத்தல் வசதி என அழைக்கப்படும் இச் செயற்திட்டம் மற்றும் ஏனைய | 6.47 | முடிவுறா வேலையின் பெறுமதி அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொதுத் திறைசேரியிடமிருந்து அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இதனைத் திருத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம், மொத்தக் கடன் வட்டியானது விகிதாசாரமாக பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். |

செயற்திட்டங்களிற்குரிய கடன்கள் மீதான மொத்த வட்டியும் இச் செயற்திட்டத்திற்கு நேரடியாக சாட்டப்பட்டிருந்தது.

**3.2 பௌதீகச் செயலாற்றல்**

**3.1 செயற்திட்டச் செயற்பாடுகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம்**

மதியுரைச் சேவை உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 19 ஆந் திகதி பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த துறைமுக நுழைவு விரிவுபடுத்தல் நெடுஞ்சாலை செயற்திட்டம் 06 மாதக் கால தாமதத்தின் பின்னர் 2018 மார்ச் 14 ஆந் திகதியன்றே கையளிக்கப்பட்டிருந்தது.

**3.2 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| கடனின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,496.91 இற்குச் சமமான யூஎஸ்டொலர் 10 மில்லியன் தொகையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 264.38 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 1.54 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வரிசை அமைச்சின் வருடாந்த பாதீட்டின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 243 மில்லியன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 172 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | கடனின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு என்பன பயன்படுத்தப்பட்டிருக்காமை | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிக் கட்டுப்பாடு கள் பலப்படுத்தப் பட்டு நிதி வளங் கள் பயன்தரும் விதத்தில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |